# முதல் இடைப்பருவத்தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 8x1=8

1. "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க.

   அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்

   இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2. தவறான இணையைத் தேர்வு செய்க.

   அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

   இ) கடல் + அலை - உயிர் + மெய் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

3. கருப்பட்டி, பணங்கற்கண்டு போன்றவை

   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்

   i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ-தவறு, ஆ-சரி

4. முயலா - இலக்கணக்குறிப்பு தருக.

   அ) பண்புத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

   இ) வினைத்தொகை ஈ) தொழிற்பெயர்

5. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

   விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி

   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

6. துன்பப்படுபவர் ________.

   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

7. காட்டின் மூலவர் யார்?

   அ) சிங்கம் ஆ) புலி இ) சிறுத்தை ஈ) யானை

8. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   1) வெள்ளிவீதியார் - அ) புறநானூறு

   2) அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா

   3) வாடிவாசல் - இ) குறுந்தொகை

   4) இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

   i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ அ ஆ

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4x2=8

9. "பாயிரம்" பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

10. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
12. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
13. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
14. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3 x 4 = 12**

15. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.
16. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
17. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
18. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
19. வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3 x 2 = 6**

20. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***
    கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்
21. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
22. ***எவையேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.***
    அ) ஈன்ற (அல்லது) ஆ) வருகின்ற
23. ***எவையேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.***
    அ) உயர்ந்தோங்கும் (அல்லது) ஆ) புகழெனின்
24. ***தமிழ்ப்படுத்துக.***
    அ) Earth Environment ஆ) Cultural Elements

**V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக) 2 x 5 = 10**

25. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

26. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6**

27. அ) 'உண்டால் அம்ம' - எனத்தொடங்கும் புறநானூறு பாடல்.
    ஆ) 'பொருட்டு' - என முடியும் குறள்

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com